ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

# ஆர்யதர்மம்.

புத்திரனாயினும், மித்திரனாயினும், சத்துருவாயினும், மற்றுமெவனாயினும், பாபகார்யத்தைச் செய்ததாகத் தெரிந்தால் உடனே கடுமையாய் சிக்ஷித்து மீண்டுமவ்வழியிற்செல்லாமலும், பாபத்தைச் செய்யப்போவதாகத் தெரிந்தால் முன்னெச்சரிக்கைசெய்து அதில் பிரவேசிக்காமலும் கண்டித்து அவர்களை நல்வழியில் நடத்திவைப்பது பெரியோர்களின் சம்பிரதாயமாகும். அதனால் அந்த சம்பிரதாயத்தை அனுஸரித்தவர்கள் எவனிடத்திலும் தாக்ஷிண்யப்படமாட்டார்கள். அப்படி தாக்ஷிண்யப் பட்டுத் தப்புவழியில்நடப்பவனைத் தயையினால் கண்டிக்காமல் விட்டுவிட்டால் அவனையொட்டியொட்டிப் பலர் கெட்டுப்போய்விடுவர். பொறைபோகுமோர் அவயவத்தின் உபத்திரவத்தைப் பொறுத்துக் கொண்டு உபேக்ஷையாயிருந்தால் அதுகெட்டதோடு நிற்காமல் மற்ற அவயவங்களையும் கெடுத்து உயிரேபோகும்படி செய்துவிடுமென்பது பிரத்தியக்ஷானுபவமல்லவா? கார்ய நிர்வாஹக் கூட்டத்தில் கெட்டவன் ஒருவனிருப்பானாகில் மற்றவர்களையும் கெடுத்துவிடுவானென்றே தீர்மானித்து அவனை விலக்கிவிடவேண்டியது யுக்தமே. ஒருகார்ய நிர்வாஹ கூட்டத்தார் ஒரு உத்தேசத்துடன் அதற்குவேண்டிய கார்யங்களைச் செய்துவருகையில் அதில் ஒரு சம்பந்தமுமில்லாதவன் குறுக்கேபுகுந்து கார்யக்கிரமத்தை மாற்றத் தலையிடுவது தகாதகார்யமென அக்கூட்டத் தலைவன் தெரிந்துகொண்டு அவனைக் கண்டித்துத் தலையெடுக்காமற் செய்துவிடுவானல்லவா? அதுபோலவே இந்த ஜகத்திற்காகவேண்டிய கார்யத்தில் ஜகத்தைப்படைத்துக் காத்துவரும் கடவுளுக்கும், அவரது ஆக்ஞையைத் தழுவிநிற்கும் ஆதிகாரிகபதிவியிலமர்ந்த தேவர்களுக்கும், ரிஷிகளுக்கும், அதிகாரமேயன்றி மற்றவர்களுக்கு இதில் எவ்வித சம்பந்தமும், அதிகாரமுமில்லை. அப்படியிருக்கையில் தற்காலத்திய சிலர் ஜகத்காரியத்தில் புகுந்து ஆசாராதிகளை அழித்துவிடவோ, திருத்தி அமைத்துவிடவோ, பெரும் பாடுபட்டுவருகிறார்கள். இது ஜகத்திற்கு எல்லாம் ஆதிமூலமான கடவுளுக்குச் சம்மதமாகாதேயென்று ஜன்மாந்தரீய ஸாத்துவிக வாஸனையால் ஆர்யச் சிறுவர்கள் கேட்டால் கடவுளே இல்லையென்று சிறுவர்மனதைக் கலக்கிவிடுகிறார்கள். இந்த அநீதியை சகிக்கமுடியாமலே கடவுள் அவர்களுக்கு இஹத்திலேயே கண் கூடாகக்காணும்படியான பலவித சிக்ஷையைச் செய்துவருவதும், பிராப்தப் பிராபல்லியத்தால் இஹத்திலேயே செய்யச் சரிப்படாவிடில் "அரசன் அன்றுகொல்வான் தெய்வம் நின்றுகொல்லும்" என்ற நியாயத்தை அனுஸரித்து மறுபிறப்பில் அங்கஹீனர்களாகவும், வாக்கு முதலிய இந்திரியங்களற்றவர்களாகவும், கூட்டத்திற்கே வரக் கதியற்றவர்களாகவும், செய்துவிடுவதும், கர்மவிபாக நூல்களில் கூறியபடி யாவரும் கண்ணாரக்கண்ட விஷயமே. கடவுளில்லையென்று ஒருவர் சொல்லிவிட்டதற்காக அவர் இல்லாமற்போய்விடமாட்டார். பூனை தன் கண்ணை மூடிக்கொண்டு உலகமே அஸ்தமித்துவிட்டதாகஎண்ணினால் உலகத்தார்கண் இல்லாமற் போய்விடுமா? இந்த விபரீதவழியிற்செல்லாமல் கடவுள்கட்டளைப்படி நடந்து யாவரும் கரையேறுவாராக. சுபம்.

பத்திராதிபர்.

ஆர்யதர்மம்.
ப்ரஜாபதி-ஸூ ஐப்பசிமீ௳ ௨௪

# நரகசதுர்த்தசீ.

நமது ஸ்மிருதிகளில் நரகசதுர்த்தசீயென்னும் தீபாவளி யென்னும் கூறப்பட்ட புண்ணியகாலத்தைப் பாரதவாஸிகள் யாவரும் பெரிய பண்டிகையாகக் கொண்டாடி வருகிறார்கள், அதன் உத்தேசம் ஜவுளிவியாபாரிகளும், சீனவெடி வியாபாரிகளும் மற்றுமுள்ள வாணியர்—சேணியர் முதலியவர்களும் பெருத்த பணத்தை அடைந்துவரட்டுமென்பதுமாத்திரமல்ல. முக்கிய மானது வேறென்றுண்டு. ஆனால் சிலர் இதையே பெரும்பயனு யெண்ணி ஞாபகப்படுத்துகிறார். சாஸ்திரமோ இந்த புண்ணிய காலத்தில் புண்ணியத்தையே முக்கிய உத்தேசமாகக் குறிப்பிடு கிறது. பாபபுத்தியுள்ள நரகாசுரனை பகவான் ஸம்ஹரித்து தர்ம ஸ்தாபனம் செய்ததால் இதற்கு நரகசதுர்த்தசீயென்று பெயர் வந்தது. அதில் பகவானுக்கு உதவிபுரிவதுபோல் அபிமானங் கொண்ட பக்தர்கள் சிலவெடிகளைப்போட்டுக்கொண்டுபோனதை தற்போது சீனவெடிவாங்கிச்சுடுவது நினைவூட்டுகின்றது. துஷ்ட சம்ஹாரத்தாலும், தர்மஸ்தாபனத்தாலும் களிப்படைந்த தார்மி கர்கள் அந்தக்காலத்தில் மங்களஸ்நானம்செய்து புது ஆடைகளைக் கட்டிக்கொண்டதைத்தான் இப்பொழுது சிஷ்டாசாரமென்று தார்மிக பரம்பரையில் வந்தவர்கள் அனுஷ்டித்துவருகிறார்கள். அந்த புண்ணிய தினத்தில் எல்லோரையும் பகவானுகபாவித்து மங்களஸ்நானம்செய்வித்து புதுஆடை தரிக்கும்படிசெய்யவேண்டு மென்ற விதியை அனுஸரித்து ஆஸ்திகப் பிரபுக்கள் ஆங்காங்கு ஏழைகளுக்கு எண்ணை தேய்த்துக்கொள்ளக் கொடுப்பதையும் வஸ்திரதானம்செய்வதையும் காண்கிறோம். அவ்வளவு சக்தி யற்ற ஏழைகளாயினும், எல்லோருக்கும், எப்பொழுதும்கொடுக்க முடியாமற்போனாலும் மாப்பிள்ளைகளையாவது அழைத்துக் கொடுக்கிறார்கள். தலைதீபாவளியிலாவது கொண்டாடுகிறார்கள். நரகாசுரன் பகவானுக்குப் பூமிதேவியினிடம் பிறந்த புதல்வனு

வான். இது ஸ்ரீமத் பாகவதம் 10-வது ஸ்கந்தம் 59-வது அத்தியாயத்தில் நரகாசுர ஸம்ஹாரமானபின் பூமிதேவிவந்து புலம்பிப்ரார்த்திக்கும்பொழுது

यदाहमुद्धृता नाथ त्वया सूकरमूर्तिना ।
त्वत्स्पर्शसंभवः पुत्रस्तदाऽयं मेऽभ्यजायत ॥
सोयं त्वयैव दत्तोमे त्वयैव विनिपातितः ।

"ஓ! நாதா!! தாம் எப்பொழுது வாராஹாவதாரம்செய்து ஸமுத்திரத்தில் அமிழ்த்தப்பட்ட என்னைத் தூக்கிவந்தீர்களோ! அப்பொழுது தேவரீருடைய சரீரஸ்பரிசத்தால் இந்தப்பிள்ளை எனக்கு உண்டானான். ஆகவே தேவரீராலேயேகொடுக்கப்பட்ட என்குழந்தை தங்களாலேயே கொல்லப்பட்டான்" என்று கூறப்படுகின்றது. பகவானுக்கு பூமிதேவியிடம் பிறந்தவனுயினும் பிராசீன வாஸனுபலத்தால் பாபத்தில் ப்ரவிர்த்திக்க அதைச் சஹிக்காமல் பகவான் அவனை ஸங்கரித்தாரென்றால் மற்றவர்களையாவிட்டுவிடுவார். ஒருக்காலும் விடமாட்டார். தன்னை இல்லையென்று திரமாகச்சொன்னாலும் வீணில் பிராணிகள் பாபமூட்டையைக் கட்டுகிறார்களே என்று கருணையடைந்து ஸாத்துவிக தார்மிகர் மூலமாய் எச்சரிக்கைச் செய்யச்செய்வார். அதிலும் கேளாவிடில் அதிவிருஷ்டி அனுவிருஷ்டி முதலிய ஈதிபாதைகளைச் செய்து பார்ப்பார். அதிலும் புத்திவாராவிடில் கொடியநோய்களைக்கிளப்பிவிடுவார். அதையும் கெவனிக்காவிடில் அனேகக் குறைகளை உண்டுபண்ணுவார். ஆகையால் பகவதபசாரத்திற்கு ஆளாகக்கூடாது. வர்ணாசிரமதர்மத்தை அழிக்கத்தலைப்பட்டவர்களும் இத்தீபாவளிப் பண்டிகையில் மங்களஸ்நானம் செய்ய வேண்டிய ஆவச்கதையைப் பலகாரணங்களை முன்னிட்டுப் பிரசுரப்படுத்துகிறார்களேயன்றி புண்ணியத்தை ஞாபகத்தில் கொள்ளுவதில்லை, பகவான் புண்ணியத்தில் பிரியப்பட்டவனேயன்றி வேறல்ல. எங்கும் ஸமபுத்தியுள்ளவராயினும் பாபிகளிடம் மாத்திரம் அதை அடைவதில்லை.

तानहं द्विषतः क्रूरान् संसारेषु नराधमान् ।
क्षिपाम्यजस्रमसुरानासुरीष्वेव योनिषु ॥

என்பதாதியாக கீதையில் கூறியதை நன்குணர்ந்து தர்மத்தையே நாடி சுகப்படுவார்களாக. சுபம். பத்திராதிபர்

# பாத்மவசனமென்னும் பதர்மொழியகற்றல்.

(ப்ரும்மவித்யா பத்திரிகையிலுள்ளது-)

வைதிகர்காள்! சிறிதுகாலமாய் இப்புண்ணிய பூமியின்கண் சிலரால் நாட்டப்பட்டு அம்மாபினாலேயே தம்மதமெனத் தழுவப்பட்டுத் துவிதசைவமெனும் மாயாவாதம் மலிந்துவருவதை மறைவல்லவந்தணர் யாவருமறிவீன்றோ? அவ்வகைச் சைவருள் கேவலவாகமவாதம் மேற்கொண்டு வேதவாதம் ஒழிந்து பிரமவாதிகளுடன் எக்காலுந்தீராப்பெரும் பிணக்குண்டாய் வேதநிந்தை, வேதாந்தநிந்தை, கன்மநிந்தை, வைதிகநிந்தை, அந்தணர் நிந்தையாகிய பல நிந்தைகள் அவருக்கு நித்திய கன்மமாய் முடிந்ததும், வேதாந்தம், புகழும் அந்தணர்குலதிலகனாய் அம்புலிசூடி பெருந்திருவருள் அவர்களுக்கு முற்றும் விரோதமாய் பண்டையக் கன்மங்களிற்செய்த தீவினைகளுக்கேற்ப விபரீதவுணர்ச்சி மேலிட அந்தோ! அந்தணர்குலத்திற்பிறந்தும் தமது திருமறையதிகாரவரைகடந்து சிறப்பாய் வேதாதிகாரிகளுக்கென ஏற்பட்ட ஆகமங்களில் தீக்ஷைபெற்று, அச்சர்வவர்ண சாதாரண தீக்ஷையால் தம் வர்ணத்துக்கு ஜன்மமாத்திரையில் அமைந்த சர்வாசாரியத்வத்தையொழித்து, சைவாசாரியத்வம் ஒன்றுமட்டிற் கைக்கொண்டு அந்தணர்க்குரிய இலக்கணங்களாய கோத்திர சூத்திர சாஸ்திரங்களைப்புரட்டி ஆண்மையற்ற புருடசிங்கம்போல் மூந்நூல் மாத்திரையில் விப்ரத்வம் நிலைக்கப்பெற்று கீழ் வர்ணத்தவர் திதிகளிலளிக்கும் அரிசிமூட்டையால் வயிற்றுக்குழியை நிறப்பி வடமொழியெழுத்துச் சிறிதும் நிகழப்பெறாத நாவிடத்தின்கண் அடிநடுமுடியில்லாத சிற்சில போலி மந்திரங்களை புரட்டிப்புரட்டி உச்சரித்து தம்மையணுகும் மற்றவரைக் குறிப்பறியாவண்ணம் ஓயாப்பெருமணி அடித்துவாழும் சில விப்ரபோலிகள் கலிகாலக்கொடுமையால் தம்மினத்தவரான திரிலோசன சிவாசாரியர், அகோர சிவாசாரியர், சதாசிவ சிவாசாரியராதியோரியற்றிய நன்னூல்பயின்றும் அதனுண்மையையறிந்துய்யாது, தமது மரபின் மாசிலாமணியாத்தோன்றி வைதிக வள்ளலாய் அருமறை புகழும் திங்கள்சூடி வள்ளல்பெருமை விளக்கிய திவ்யசூத்ரபாடியம் வகுத்தருளிய ஸ்ரீமத் ஸ்ரீகண்டசிவாசாரிய மூர்த்திகள்—அருள் திருவாக்கையாராய்ந்து அதன்வழிநில்லாது

மேற்கண்ட மாயாவதி வர்ணவாரியற்றிய நூல்களையே கைக்கொண்டனர். இவர் இங்ஙனம்கிடக்க. இவர்களுக்குள் ஏதோ ஒருவர் வெளிக்கிளம்பி திருச்சங்கோடு விவேகதிவாகரன் என்ற பத்திரிகையில் சிவாலயப்பிரதிஷ்டையென மகுடம் அமைத்து சில விஷயங்கள் எழுதிவருகின்றார். அவர் ஏதோ தம்புத்தியிற்றோன்றியவாறு எழுதிவருவதாலும் ப்ரம்மவித்யா பத்திராதிபர் எழுதிய வேதாகமப் பிராமாணியத்தில் ஆகமங்களுக்கு அளவிலாப்பிரமாணங்களால் நாட்டிய அப்பிராமாணத்தன்மையைச்சிறிதும் கண்டித்து அவற்றின் பிராமாண்யத்தை ஸ்தாபித்துக்கொள்ளாமல் நிற்றலினாலும், அதேபத்திராதிபர் எழுதிவிடுத்த குருசிஷ்ய வேறுபாட்டில் இவரினத்தார்க்கு ஏற்பட்ட ஆதிசைவவைபவவின்மையை மீளப்பெறுதும் வீண்காலக்கழிப்பாயிருத்தலாற் பண்டையகாலத்து வேளாளர்பலர் கழித்துவிடுத்த வழச்சொற்களையே இச்சிவாசாரியரும் எடுத்து வழங்கிவருவது எமக்கேதும் ஆட்சேபமில்லை. அவ்வேளாளரினும் இவரது நூற்பயிற்சியும் மற்றைய எவ்விதப்பெருமையும் இவர்க்கதிகமிராதென்பதவரது வசனநடையால் வெளிப்படுதலால் அவர்களையே எதிர்நோக்கி அவரது துர்வாதங்களை அகற்றிய நம்மினத்தவர் நன்னூல்களால் கண்டித்தோமாதலால் இவர்க்கினி யாமேதும் பேசவேண்டுவதில்லை. இவர் குறிக்கும் தீட்சாவைபவம் இவர்க்கும் பண்டாரங்களுக்கும் ஒருங்கமைந்ததேயாதலால் தீட்சிதப்பண்டார வேளாளத்திருமேனிகளும் இவர் பூஜிக்கும் திவ்யலிங்கங்களை யாராதிக்க அதிகாரிகளேயென ஏற்படுகிறது. இப்பிரதிஷ்டாதிகாரம் உபய சாதாரணமாகவே, இவரிடத்தில் அதுபெற்ற விசேடம்யாதோ? அதை மற்றவிடம் விசாரிப்பாம். ஈண்டு மற்றவாறியாது இவர் மட்டும் படித்தறிந்த பாத்மபுராணவசனமொன்றை மட்டில் ஆராய்வாம்.

मायावादमसच्छास्त्रं प्रच्छन्नं बौद्धमेव च ।
मयैव काथितं देवि कलौ ब्राह्मणरूपिणा ॥
अपार्थं श्रुतिवाक्यानां दर्शयं लोकगर्हितम् ।
कर्मस्वरूपत्याज्यत्वं यत्र च प्रतिपाद्यते ।
सर्वकर्मपरिभ्रंशान्नैष्कर्म्यं यत्र चोच्यते ।
परात्मजीवयोरैक्यं मयात्रप्रतिपाद्यते ।

ब्रह्मणोऽस्यपरं रूपं निर्गुणं दर्शितं मया ।
सर्वस्य जगतोऽप्यस्य नाशनार्थं कलौ युगे ॥
वेदान्तवन्महाशास्त्रं मायावादमवैदिकम् ।
मयैव कथितं देवि जगतां नाशकारणात् ॥

இதில் வேதாந்தம் என்றாவது விவர்த்தவாதமென்றாவது அநிர்வசனவாதம் என்றாவது அத்துவிதம் என்றாவது ஔபநிடதம் என்றாவது அபின்னநிமித்தவாதம் என்றாவது கேவலவைதிகம். என்றாவது பிறர்கூறும் கேவலாத்துவிதமென்றாவது எடுத்துக் குறிக்கப்படாது. 'மாயாவாதம்' என்றுகுறிக்கப்பட்டதுவேதாந்தமென்று இவர்கொண்டது எதனாலென்று யோசிக்குமிடம் இவருக்கமைந்த அகாரணாத்துவித சித்தாந்த த்வேஷத்தாலென்றே நம்புகிறோம். இவ்வசனத்தின் பிராமாண்யத்தைப்பற்றிப்பின் சொல்வோம். முதலில் இவருக்குக்கிடைத்த இப்போலிப் புராண வசனமாவது இவருக்குச்சாதகமாயதோவென்று விசாரிப்பாம். இந்தச் சுலோகங்கள் வடமொழியிலமைந்தனவாகவே அவைகட்குப் பொருள் உரைத்தல் வடவியல்பற்றியே செய்யவேண்டும். அங்ஙனம் செய்யப்புகின் இவர்கொண்ட மாயாவாதசைவமே இதற்கு இலக்காய் முடிவதை ஈண்டு காட்டுவாம்.

இச்செய்யுள்களின் இறுதியில் वेदान्तवत् என்றதினால் இங்கு நிந்திக்கப்பட்ட மாயாவாதப் பிரச்சன்ன பௌத்தசாஸ்திரம் 'வேதாந்தம்போன்றதாகவெளியிடப்பட்டதாகையால், வேதாந்த சாஸ்திரம் இங்கு நிந்திக்கப்பட்டதல்ல. மற்று அதுபோன்ற மாயாவாதமேயென விளங்குகின்றது. அது யாதெனில் மேற்கண்ட விசேடணங்களால் துவைத சைவமேயென்று ஏற்படுவதைக்காட்டுவாம். முதலில் மாயாவாதம் என்றுஎடுத்து அதையே அஸத்சாஸ்திரமென்பதாதி விசேடணங்களால்நிந்திக்கவெழுந்தது இந்த வசனம் இதுவரை யாம் எடுத்துக்காட்டிய பலவகை நியாயங்களால் துவிதசைவமே மாயாவாதமாகவே, அதுவே ஈண்டு உத்தேசமாக அனுவதிக்கப்பட்டதெனலாம். அற்றேல் மேல் விசேடணங்கள் பொருந்துமாறெங்ஙனமெனிற்கூறுதும்;—அஸத் சாஸ்திரம் என்பது முதலடை. இது வேதாந்தத்திற்குப் பொருந்துமா? துவிதசைவ மாயாவாதத்திற்குப் பொருந்துமா? என்று விசாரிப்பாம். அஸத்சாஸ்திரம் என்றால் அதற்கு அஸத்தானசாஸ்

திரம் என்றாவது அஸத்தினாலாக்கப்பட்ட சாஸ்திரம் என்றாவது
அஸத்தைக்குறிக்கும் சாஸ்திரம் என்றாவது பொருள் உண்டு.
அவற்றுள் அசத்தான சாஸ்திரம் எனப்பொருள்கொண்டால்
சாஸ்திரம் அசத்தாகும். சாஸ்திரம் சொற்றொகுதியாதலால்அதை
அசத்தென்பது அதனால் வெளியிடப்படும் பொருளாலன்றி
வேறுவிதம் கூடாது. ஆகவே மூன்றாவதான பொருளிலேயே
இதுவும் சேரும். இரண்டாவதோ பொருந்தாது. ஈசன் தானே
அதைச்சொன்னான் என்பதனாலும் அவனை அஸத்தென்றிட
இத்துவிதியும் ஒப்பானாகையாலுமென்க. இனி அஸத்தெனக்
குறிக்கும் சாஸ்திரமே அஸத் சாஸ்திரமாகவேண்டும். அங்ஙன
மாக வேதாந்த சாஸ்திரம் 'ஜகத்து' சதசத்தல்ல. அனிர்வசனீய
மென்றும் 'ஆன்மா' சத்தே, என்றும் கூறுதலாலதை அஸத்
தென ஒன்றைக்குறிக்கும் சாஸ்திரம்' எனல் கூடாது. மற்று
இந்த துவிதசைவம் ஆன்மாக்களை சதசத்து எனவும்'ஜகம்' சுத்த
அசத்தெனவும் குறித்தலால் அசத்சாஸ்திரமாகும். மேலும்
அஸத் சாஸ்திரம் அஸத்தான பிரபஞ்சத்துக்குச் சிருஷ்டியாதி
பஞ்சகிருத்தியம் ஈசனிடம் அமைக்கும் இச்சாஸ்திரம் கந்தர்வநகா
சிற்பத்தை நாட்டுத்தச்சனிடம் அமைக்கும் நூலளவேயாமாத
லால், அஸத்தான பிரபஞ்சத்தை நோக்கிய சத்தாய பஞ்சகிருத்
யம் ஏகதேச வசத்தாய ஆன்மாவைநோக்கி ஈசனால் செய்யப்பட்
டதாய்க்கூறும் சாஸ்திரமன்றி மற்றேதும் பயன்பெறாது. நிற்க
மாயாவாதமும் அதுவே. அஸத் சாஸ்திரமும் அதுவே பிரச்சின்ன
பௌத்தம்வேறு. அச்செய்யுளில் "பிரச்சின்னம்பௌத்தமேவச"
என்று அஸத்சாஸ்திரமாய மாயாவாதத்தையும் பிரச்சின்னபௌத்
தத்தையும் நான்சொன்னேன் என்றிருத்தலால் எனில், ஆகுக.
மாயாவாதம் அசத்சாஸ்திரம் என்றது சைவத்தையே என்றது
மறுக்கவொண்ணாதாயிற்றே. மேல் பிரச்சின்ன பௌத்தமென்ற
தும்வேதாந்தத்தை என்றுகுறித்ததொவ்வாதுகாட்டுவாம். அதை
யும் இறுதியில் வேதாந்தம்போல் என்றதால் அதுவும் வேதாந்த
மாகாது. திருஷ்டாந்த தார்ஷ்டாந்தங்கள் ஒன்றாகாது. என்பது
எல்லாநியாயவாதிகளுர ஒப்பியவிஷயம். நிற்க; இச்சிவாச்சாரி
யார் ஒப்பியவழி மாயாவாதமே பிரசின்னபௌத்தமாயினும்மேற்
கண்டவாறு வேதாந்த மதமாகுமா? அல்லது துவிதசைவ மாயா
வாதமாகுமா? என்று விசாரிப்பாம். பௌத்தர்களுக்கு உலகம்

அஸத்து; துவிதசைவத்துக்கு அஸத்து; வேதாந்திக்கு சதசத்து விலக்ஷணம்; பௌத்தர்களுக்கு ஆன்மா சத்துப்போலி அசத்தே இவருக்கும் ஸதஸத்தே. வேதாந்திகளுக்கோ முற்றிலும் ஆன்மாசத்தே. இங்ஙனமாக இத்துவித சைவத்தை பௌத்த பேதமேயென்னுது பிரச்சின்ன பௌத்தம் என்றது எதனுல் எனில்பௌத்தத்தில் ஸ்பஷ்டமாய் நிரீசுரவாதம் செய்யப்பட்டது. இம்மதத்தில் ஈசுவரனைக் கர்த்தாவாகவும் போக்தாவாகவும் ஒப்பியதுபோல் ஒப்பி அவனைநோக்கி எல்லாம் சூனியம் என்று ஜீவ ஜகத்துக்களை சூனியப்படுத்தி ஜீவர்கள் சதசத்தாகவே இவரறியும் வஸ்துவாய அவ்வமலனும் இறுதியில் அசத்தாலடையப்படுபவனும் அறியப்படுபவனுமாதலால் அஸத்தேயாக்கப்படுகிருன். ஆகவே உற்றுநோக்கில் பௌத்தமும் நோக்காதார்க்கு இஃது ஒரு ஸேசுவரவாதம்போற்ருேற்றுகின்றது. ஆகவே பிரச்சின்ன விசேடணம் கொடுக்கப்பட்டது. மேலும் பௌத்தத்தில் அறியப்படும் பொருள் யாவும் அசத்து. இவர் மதத்தில் அறிபவனே சதசத்து; ஆகவே இவர் பிரச்சன்னர். பௌத்தருக்கு உலகத்தை ஆக்கியளித்தழிக்குமீசன் ஒருவனில்லை. இவர்மதத்தில் தம்மை நோக்கிய சத்துஞ் சூனியமுமான வுலகின்கண் தன்னதிகாரம் தடையின்றிச் செலுத்தும் சுவப்னப்பிரபஞ்ச சக்கிரவர்த்தியாய் ஒருவனீசன் உண்டு. ஆகவே பிரச்சன்னம என்றது. பௌத்தர் வேதங்களை வெளிப்படையாய் அப்பிரமாணமென்றனர். இவர் அங்ஙனங்கூருது பிரமாணம் என்று முன்னெப்பி வைதிகப் பெயரைத் திருடியேற்றுப் பின்வழக்கில் வேதங்கள் பசுநூல் மயக்கநூல் விபசாரநூலாதி திவ்ய சத்தப்பிரயோகம் செய்பவர். ஆகவே பிரச்சன்ன விசேடணம் இவருக்குப்பொருந்தும். பௌத்தர் பிரத்தியக்ஷமே முக்கியப் பிரமாணமென்பர். இவர் ஆப்த வாக்கியமே. அதாவது சத்தப் பிரமாணமே முக்கியமென்று சொல்லி ஜகத்தைப்பற்றி வேதாந்திகளிடம் வாதிக்குமளவில் பிரத்தியக்ஷத்தை முக்கியப் பிரமாணமெனக்கொள்வர். ஆகவே பிரச்சன்னவிசேடணம் ஒக்கும்; உலகம்கணந்தோறும் மாறுபடும் என்பர் பௌத்தர். இவர் பரிணமிக்குமென்பர். இதனுலும் அவ்விசேடணமிவருக்குத் தகும். பௌத்தரும் ஜீவன் இயல்பில் நிர்குணனென்றும், அவன் 'காதி' என்னும் கன்மத்துடன் கூடிய காலத்து பத்தனுகப்படுவானென்றும், 'அகாதி' என்னும் கன்மத்துடன் கூடியகாலம் சுகியாய் சில உத்தம லோகங்களைப்பெற்று

ஆனந்திப்பான். இரு கன்மங்களும் விட்டவன் நிர்வாணியாவான் என்பர். இவரும் ஜீவன் இயல்பில் நிற்குணன் என்றும் அவன் மலத்துடன் கலந்து மும்மலன் இருமலன் ஒருமலன் நிர்மலன் எனப் படிகட்டி பக்தன் உத்தமலோகானந்தம் பெறுபவன். பத முத்தி பெறுபவன் 'முத்தன்' என்பார். ஆகவே பிரச்சன்ன விசேடணம் ஒவ்வும். மேலும் இவரும் ஆன்மாக்கள் அநேக மென்பர்; நிரீசுவர சாங்கியரும் ஆன்மாக்கள் அநேகமென்பர்; பௌத்தரும் ஆன்மாக்கள் அநேகமென்பர். ஆகவே இவருக்கு அவ்விசேடணம் தக்கதே. மேலும் ஆதாரசிலாதிஸ்தூபி ஈறுக ஏற்பட்ட வமைப்பின்றி ஆலயங் கூடாதென்பதும் ஆசாரியத்வம் ஓர் சம்ஸ்காரத்தால் அமையுமென்பதும் இவ்விருவருமொப்பிய விஷயம். இவரும் வர்ணாசிரமங்களை யங்ஙனமாக மதிக்கார். அவரும் அப்படியே. இனியேனும் பலவிதங்களில் இருவரும் ஒற்றுமைபட்டுச் சிலவிஷயங்களில்மட்டும் வேறுபட்டிருத்தலால் இவரே பிரச்சன்னபௌத்தரென்றது. மேல்விசேடணங்களும் வாக்கியங்களும் எங்கமையுமென்பதையும் கவனிப்பாம். "மயை வகிதந்தேவி கலௌப்ராம்மணரூபிணர்" என்னுலேயே சொல்லப்பட்டது. கலியில் ப்ராம்மணத் திருமேனியாய் என்றது இதன் கருத்து. இவரும் இவரினத்தாரும் ஒப்பியபடி வேதவ்யாஸரே ஏகான்மவாத நூலாசிரியராகவே அவர் துவாபரயுகத்திறுதியிலுற்பவித்த விஷ்ணுவம்சத்தவராதலால் அவர் இதன் பொருளாகார். இனி கலியிற்பிறந்த சங்கராசாரியசுவாமிகளே இதன் பொருளெனில் மேலும் கீழும் இவரும் இவரினத்தாரும் எழுதிவரும்வழி சங்கராசாரியர்சிவாவதாரமாவார். ஆகவே இவர் மதப்படி அது ஒவ்வாது. ஒருஸமயம் எமது வாதங்கெட்டாலும் கெடட்டும். இவ்வத்துவிதவாதத்தைப்பிரச்சன்னபௌத்தம் மாயாவாதம் என்று வைதிட்டால் எமக்கதே புருஷார்த்தம்' என்று விதண்டைபேசிடின் சங்கரகுருநாதன் சிவாவதாரமாயினும் அந்தணருக்தவத்துதித்த விப்ரசிகாமணியாயினும் இவர் மட்டே அத்துவிதவித்தையின் ஆசிரியரல்ல மற்று வேதவ்யாஸர் கௌடபாதாசாரியார் ஆகவிருவரும் அத்துவித வித்தையின் ஆசிரியராகவே என்னுலேயே சொல்லப்பட்டதெனல் கூடாது. மற்று வேதாந்தங்கள் பிரமன் விஷ்ணு ருத்திரன் முதலிய பல தேவதைகளிடம் தோன்றினவென ஆங்காங்கு சொல்லப்படுகின்

றன, சிவாகம சைவசாஸ்திரங்களைச்செய்தருளியவன் சிவனேயாதலால் அதை 'என்னுலேயே சொல்லப்பட்டது' என்றுதோற்றியது. மேலும் கூர்மாதி புராணங்களில் கலியிற்பிறக்கும்வேதாதிகாரம் நீங்கப்பெற்றவரைநோக்கி ஈசன் ஆகமங்களாகிய சில சாமான்ய சாஸ்திரங்களைச் செய்தருளுவார் என்று சொல்லப்படுவதால் புராணங்களில் கூறியவாறு மற்றவிடங்களில் ருத்திரமூர்த்தியேநேரிலும் அவதாரத்திலும் வெளியிட்ட சாஸ்திரமே இதன் பொருளாம். மேலும்ருதஸங்கிதை, விஷ்ணுபுராணம், வாயுசங்கிதை சனகத்குமார சங்கிதை முதலிய புராணங்களிலும் பாரத முதலிய இதிகாசங்களிலும் அனேகவிடத்துள்ள இவ்வத்துவிதமென்ற வேதாந்தம்கலியில் ஓர்பிராமணமுகத்திலவதரித்ததென்பதுதவறு. மற்று மெய்கண்டாருக்கு உபதேசித்தகுருபாம்பரையில் கலிப்பிராம்மணர் கருத்தோ அதையறிந்து கூட்டுக. மேல்அதனிலக்கணமாக 'அபார்த்தம் சுருதிவாக்யானும்' என்று வேதவாக்கியங்களுக்கு அபார்த்தம் தப்பர்த்தம் நிறைந்திருப்பதும் ஒன்றுகக் குறிக்கப்பட்டது. இதுமாயாவாதத்திற்கே பொருந்தும்.

எங்ஙனமெனில் வேதார்த்தத்தைத்தானேயறிதல் கூடாதகாரியமாகவே வேதங்களை இதிகாசபுராணங்களால் பொருட்படுத்துக' என்ற விதியையும் வேதங்களைப் பொருட்படுத்தவெழுந்த ஜைமினீய நியாயம் ஆயிரத்தாலும் அவைகளின் பொருள் துணியப்படவேண்டியிருக்க, அங்ஙனமின்றி இதிகாச புராணவிருத்தாந்தங்கள் அநேகம் இவர் சித்தாந்தத்தில் அகப்படுவதால் இது ஆகமவாக்கியங்களின் பொருளானுலும் சுருதிவாக்கியங்களுக்கபார்த்தங்களே. திருஷ்டாந்தமாக அத்துவிதம் என்னும் சொல்லுக்கு 'ஒன்றுமல்ல இரண்டுமல்ல, ஒன்றுமிரண்டுமல்ல யென்பதாதி யவ்வியவஸ்தைப் பொருளையும் அகாத்துக்குக் கன்மப் பொருளையும் எடுத்துணர்க. ஆகவே வேதங்களுக் கபார்த்தம் வேதாந்தங்களில் இராது. அவை ஏகான்ம வாதத்திற்குனே தனது பூர்ணுபிப்பிராயத்தை வெளியிடுகின்றன வென்பதை வேதாந்தநூற் பயின்றறிக. ஆகவே மாயாவாதத்துவிதசைவமே இதன் பொருள். இதில் தர்வ்யயம், என்ற பதம் ஒன்று இருக்கிறது. அது வடமொழிச்சொல்லாகக் காணப்படவில்லை. அது அச்சுக்குற்றமோ மற்றெதுவோ? இது நிற்க. மேலே அதனிலக்கணங்களும் மாயாவாதத்துக்கே யுசிதமவது காண்க. 'கர்மஸ்

ஸ்ரூபத்யாஜ்பத்தவம் யத்ரசப்ரதிபாத்யதே’ என்றதனுல் எதனிடம் கன்மங்களை சொரூபத்துடன் விடும்படி சொல்லப்பட்டது என்று ஓரிலக்கணம் எற்படுகிறது. இது வேதாந்தங்களில் இல்லை. வேதாந்தங்களில் ஈசாவாசியம் ‘இங்கு கன்மங்களைச் செய்துகொண்டே’ என்றும் பிரகதாரண்யகம் அவ்விவன்றன்னை யந்தணாறியவிரும்புவர் யக்ஞத்தால் தானத்தால் தவத்தால் விரதத்தால் என்றும், பஞ்சாக்னிகளும் நாசிகேதம் என்கிற வக்கினி சயனக்கிரியையை மும்முறை நடத்தியவர் திருநாசிகேதர். திருமூன்று. நாசிகேதம் அக்கினிசயனம் திருநாசிகேதர்களும் பிர்மத்தையறிவார் என்று கடோபநிஷத்தும், எவனுக்கு அக்னிஹோத்திரம் தர்சபூர்ணமாசம் சாதுர்மாஸ்யம் ஆக்ரயணம் வைசுவதேவம் அதிதி பூஜை இவைகளில்லையோ அவன் எழுலகங்களில் இம்சிக்கப்படுவானென்று முண்டக உபநிடதமும், அக்கினிஹோத்திராதிகள் வேதங்களின் பிரயோஜனமென்றும், ‘தேவகாரியம் பிதிருகாரியங்களை விட்டொழியற்க’ என்றும் தைத்ரீயவுபநிடதத்தும் இவ்வான்மா புண்ணிய கன்மங்களால் நற்கதியைப் பெறுவான்’ என வைதரேய வுபனிடதமும் கன்மத்தை விடக்கூடாதெனக்காட்டுகின்றது. மேலும் சாந்தோக்கிய உபநிடதத்தில் பல கன்மங்களும் பிருகதாரண்யத்தில் பல பாகங்களில் பல கன்மங்களும் விதிக்கப்பட்டன. இனி விரிவஞ்சி உபநிடதவசனங்களை விடுத்தாம். கீதாசாஸ்திரமுஞ் சுவகர்மங்களை எவ்வளவும் ஞானியும் விடக்கூடாதென வற்புறுத்துகின்றதாகவே வேதாந்தங்கள் கருமங்களை விட்டொழிக்கச்சொல்லவில்லை. அங்ஙனம் எவ்வேதாந்த நூலாசிரியரும் கூறினரில்லை வேதாந்த பாஷ்யக்கர்த்தாவாய ஜகத்குருஸ்வாமிகளும் “அநேக ஜன்மஸித்தாநாம் சிரௌதஸ்மார்த்தா நுவர்த்திநாம்” என்று பல ஜன்மங்களில் சிரௌதம், ஸ்மார்த்தம் இக்கன்மங்களை அனுஷ்டித்தவரே ஞானசாஸ்திராதிகாரிகள் என்றனர். ஆக கர்மஸ்வரூப தியாஜ்யத்வம் என்றது வேதாந்திகளிடமணுகாது; மற்று அது துவிதசைவத்தில் உண்டென்பதைக்காட்டுவாம். இச்சைவத்தில் தீட்சாவிதியில் பிராமணர்க்குரிய நாற்பது சம்ஸ்காரங்களையும் சில பிரதிநிதி ஹோமங்களாகச் செய்யும்படியும் சோமாதி யாகங்களை விட்டுவிடும்படியும் அனேகவிடங்களில் விதிக்கப்படுதலால் அவ்வக்கன்மங்களுக் கேற்பட்ட சொரூபநாசம் இதில் வருவதால்

இது கன்மங்களை சொரூபத்துடன்விட விதித்தநூல் என்பது வெளிப்படை. மேலும் வைதிககன்மங்களையும் ஸ்மார்த்த கருமங்களையும் இங்ஙனம் ஒழித்த இந்த சைவநூல் நான்கு வருணங்களுக்கும் வேற்றுமை சிறிதுமின்றிச் சில கன்மங்களை விதித்தது. அவைகளை உற்றுநோக்கில் வருணாச்சிரம தர்மங்களை யனுசரியாததோர் சாமான்ய விதியாம். அவ்வவ்வருணங்களுக்கேற்ப வேதங்களால் விதிக்கப்பட்டும் ஸ்மிருதி கல்பசூத்திரங்களால் விரிக்கப்பட்டும் உள்ள கன்மங்களே இங்கு கன்மங்களெனப்படுவன. மேலும் வேதாந்த சூத்திரத்திலும்; அசுத்தமெனல் கூடாது சத்தத்தால், என்ற அதிகரணத்தில் யாகாதி கன்மங்கள் ஆன்மாக்களுக்கு சவசியமென விரிக்கப்பட்டது. இவரினத்துதித்த ஸ்ரீமத் அகோரசிவாசாரியார் திரிலோசன சிவாசாரியார் இவர் எழுதிய நூல்களில் கன்மங்களைச் சொரூபத்துடன் விட்டு மந்திரமில்லா வாகுதிமாத்திரையில் முடித்திட விதியிருத்தலால் 'கர்மஸ்வரூபத்யாஜ்பத்துவம்' என்ற விலக்கணம் இவர் மதத்தும் பௌத்தமதத்தும் ஒருங்கமைந்ததாயினும் இவர் மதத்தில் ஏதோ ஒரு ஹோமத்தை யதற்கெனச்செய்வதுபோற் செய்து கன்மத்தைவிட்டொழித்தலானும் மேற்கண்டபடி வேதங்களை முற்றிலும் அப்பிரமாணமெனத்தள்ளாது கொள்பவர்போல் கொண்டு அவற்றின் பொருள்களைமட்டில் அவற்றைப் பொருட்படுத்தவெழுந்தவங்கங்கள் மீமாஞ்சை புராணவிதிகாசங்கள் இவைகளைக் கவனியாது தோன்றியவாறு புகல்வதாலும் இம்மாயாவாதி பௌத்தர்களை அப்ரச்சந்ந பௌத்தருடன் சேர்க்காது வேறுபடுத்தவேண்டிபிரச்சன்ன விசேடணம் கொடுக்கப்பட்டதறிக. இனிமேலடையைப்பற்றிச் செல்வாம்:-"சர்வகர்மபரித்யாகாத் நைஷ்கர்ம்யம்யத்ரசோச்யதே' என்றது மேலிலக்கணம். இங்கு வேதாந்திகள் கூறும் நைஷ்கர்ம் யம்குறிக்கப்பட்டதா? அல்லது இத்துவித சித்தாந்திகள் கூறும் நைஷ்கர்ம்யம் குறிக்கப்பட்டதா. என்று விசாரிக்கப் புகுந்தால் இதுவும் 'ஸர்வகர்மபரித்யாகாத்" என்று ஏதுவை எடுத்துக்காட்டுவதால் இத்துவித சித்தாந்திகள் கூறும் நைஷ்கர்ம்யமே என வேற்படுகின்றது. எங்ஙனம் எனில் மேற்காட்டியவாறு ஸர்வகர்மங்களுக்கும் இவர் பிரதிநிதிஹோமத்தால் ஓர் சுருபத்தியாகம் செய்பவாகவே இவருக்கு நைஷ்கர்ம்யதோஷம்உண்டு. சிலர் மனப்பூர்வமாய் ஆகமவசனங்களை

நம்பி அவற்றிற் கண்டபடி தமது வருணத்துக்கேற்ப வேதாதிப் பிரமாணங்கள் விதித்த கன்மங்களை விட்டப்புறமே ஆசிரியாய் சிவப்பட்டத்தையும் சேர்த்துக்கொள்ளுகிறார். ஆகவே இவர் செய்யும் கர்மத்தியாகமே பாவத்தைப்பயக்குமென்பதுதிண்ணம். வேதாந்திகளின் நைஷ்கர்மியம் அங்ஙனமன்று; கன்மங்களை யனுஷ்டித்துச் சித்தம் தூய்மைபெற சத்குருவுபதேசத்தால் அவனுக்கபரோக்ஷம் பிறந்தால் உலகெலாமொழிந்திட பிராரத்த சேஷமாய் சரீரமிருப்பினும் அவனுக்குக் கொள்ளத்தக்கது தள்ளத்தக்கது ஒன்றுமின்மையானும் இந்தக்காலத்தில் இது செய்யவேண்டும் என்ற பேதஞானமவர்க்கின்மையானும் கர்மமே அவனை விடுதலால் அவனிடம் புத்தி பூர்வம் கன்ம[illegible]யாகம் அமையாது. இங்கு 'ஸர்வகர்ம பரிப்ரம்சாத் நைஷ்கர்ம்யம் யத்ர சோச்யதே' என்று நைஷ்கர்ம்யம் விதிக்கப்படுவதாய்ச் சொல்லப் படுகிறபடியால் வேதாந்தங்களில் எங்கும் கன்மங்க[illegible]ச்சொரூபத் துடன் விடும்படி விதிக்கப்படாமையானும் இந்துவித சைவ நூலில் அது பிரதிநிதி ரூபமாய் விட்டொழிக்கும்படி விதிக்கப் பட்டமையானும் இவ்விலக்கணமும் இவர் மதத்தே நிலைபெற்றது காண்க. மேலும் 'பராத்மஜீவயோரைக்யம் மயாத்ரப்ரதிபாத்யதே' என்பதனால் பரமாத்மா ஜீவாத்மாக்களின் ஐக்கியம் இதில்தம்மால் கூறப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இது வேதாந்தத்தில் இல்லை. வேதாந்தங்கள் ஆன்மபேதம் ஒப்பாதசாஸ்திரங்களாகவே என்றும் ஆன்மா ஏகனே என்பது அதன்முடிவாக ஆன்மாவை உபாதியுடன் சேர்த்த விடமே ஜீவன் பரமன் என்கிற விபாகம் ஏற்படுமாதலால் இவ்வித சோபாதிக பரமாத்ம ஜீவாத்மாக்களுக்கு அபேதம் அல்லது ஐக்கியம் சொல்லும் வேதாந்தம் எங்குமில்லை. இனி இவர்சாஸ்திரமோ 'கர்த்ருத்வம் போக்திருத்வம், பதித்வம் முதலிய வுபாதிகளுடன்கூடிய, பரமான்மாவுக்கும் அவனிலும் என்றும் வேறுயஜீவனுக்கும் இரண்டறக் கலத்தல் என்றபோலி ஐக்கியநெருக்கம் முத்தி என்று விளக்குதலால் இதுவே இதற்கு இலக்காம். இங்கு ஆன்மைக்கியம்கூறும் சாஸ்திரமெனக் குறிக் காது 'பராத்மஜீவைக்கியவாதம்' என்றதனால் சோபாதிக ஜீவ பரைக்கியமாவது சோபாதிகபரநிருபாதிக ஜீவைக்யமாவது சகுண ஜீவபரைக்கியமாவது சகுணபர நிர்குணஜீவைக்கியமாவது கூறி எவ்விதத்தாவது ஜீவபர சத்தங்களாற் குறிக்கப்படும் பொருள்

இரண்டும் ஒன்றும் என்றசித்தாந்தம் இவர்மதத்தன்றி வேறெங்கு காணலாம்? இவ்விதப்போலி துவிதத்தை நிர்வகிக்கவேண்டி சிவாவேசவாதியும் சிவசங்காந்தி வாதியும் சிவோபாகவாதியும் சிவசமவாதியும் குணசங்கிராந்திவாதியும் பெயர்மட்டில் 'குருலிங்க ஜங்கமர்கள் ஒன்றே' என்று அத்யந்தாஸம்பாவித சோபாதி கைக்யவாதியாய் சமயம்சேர்ந்துழி 'அத்வயவாதி' = அத்வயவாதி என்று பௌத்தன் பெரும்பட்டம் தரித்ததுபோல் இவரும் சுத்தாத்துவைதி' எனப் பெயரும் தரித்தும் ஈசன் சகுணனும், நிற்குணனும் என்று ஜீவனை சத்தும் அசத்தும் என்று ஒரு நிலையின்றி உலகத்தாரைச் சிந்தைநிலை குலைத்துத் தடுமாறச் செய்துவரும் நூலைக் கைக்கொண்டு திண்டாடுமிவாது மதமே உலகநசிக்குமாறு ஜீவபரைக்கியம் கூறுகின்றது. வேதாந்தங்கள் ஒரே ஆன்மாவுக்கு மாயை யவித்தையெனும் உபாதி வசத்தால் ஈசுவரன் ஜீவன் என்கிற வேற்றுமையென்றும் அவ்வுபாதி நசித்ததாலே முத்தியென்றும் துணிந்தனவன்றி உபாதிவிலகியவான்மா சோபாதிகனை ஈசுவரனுடன் கலந்து ஏகீபாவமடைவான் என எங்குங்குறித்தில. ஆகவே இவ்வடையும் இவர் மதத்திலமைந்ததோர் சிறந்தவிலக்கணமாகவே யிதுவும் இவர் மாயாவாதத்தை விடாது 'ப்ரம்மணேஸ்யபாம் ரூபம் நிற்குணம் தர்சிதம் மயா' பிரமத்திற்கு 'பாம்' ஆகியரூபம் 'நிற்குணம் என்று காட்டினேன்' என்று இம் மாயாவாதத்திற்கு பிர்மத்துக்குப் பாரூபம் நிற்குணமென்பது குறியெனக்குறித்தார். இது வேதாந்தங்களில்இல்லை. வேதாந்தங்களோ பிரமம் நிற்குணமே என்று சாதிக்கின்றன' அவனுக்கும் பாரூபம் நிற்குணம்; மற்றொன்று 'சகுணம்' அவன் சகுணனும் நிற்குணனுமாவானென்றும் சகளத்துக்குநிஷ்களமும் சகுணத்திற்கு நிற்குணமும் இரண்டும் பாமனிடம் அமைந்த விலக்கணம்' என்றுகூறுவது துவைதசைவ மாயாவாதமே ஆதலால் அதுவுமிவர் மதத்துக்கேயுரியது. மேலும்இப்பிரமத்தின் 'பாம்' ஆகிய ரூபம் நிற்குணமாகக் காட்டப்பட்டது என்றதில் நிற்குண சப்தம் பூரணப் பொருளாய் குணங்களின்மையை விளக்காது. எதனால் எனில் 'இந்தப் பிரமத்துக்கு' என்று பிரத்யக்ஷப் பொருளைக்குறிக்கும் "அஸ்ய" வென்றது வடமொழியில் 'இதம்' சத்தத்தின் ஆறும் வேற்றுமையிலமைந்த சொல். அதன்பொருள் எங்கும் பிரத்தியக்ஷமாகக்காணப்படும்

பொருளே' என்றும், சத்தத்தால்பிரமத்தை அனுவதித்து அதன் பாமானரூபம்' என்று அதற்கிசைந்த ரூபம்ஒன்று உண்டெனக் காட்டி 'பாம்' என்றதனுல் 'அபாம்' ஒன்றுன்டெனக்குறித்தும் இங்கு அனுவதிக்கப்பட்ட 'பாரூபத்தையே சகுணம்' என்று தாம் கூறியதாய்ப் பொருள் ஏற்படுகின்றது. 'பாம்ரூபம்' என்று சிறப்புவிசேடணமும் ரூபவிசேடணமும் அமைந்த சவிசேஷப் பிர்மத்திடம் அமையும் நிற்குணத்துவம் முற்றிலும் நாமரூபாதிகளான சர்வதர்மாபாவமாகாது. ஏகதேசமாய் ஏயகுணங்களை மட்டிலே ஒதுக்கும். ஆகவே வேதாந்தங்கள் குறித்தவாறின்றி இவர் துவிதசைவம் குறித்தவாறேபோலிநிகுற்ணவாதமே ஈண்டு மாயாவாத விலக்கணமாகவே முடிந்தது. ஆயின் அதுவே இங்கு மாயாவாதம் முதலிய சொற்களால் எடுத்துக் குறிக்கப்பட்டதறிக. மேலும்வேதாந்தம்போலஎன்றும் அவைதிகமென்று குறிப்பதாலும் இது துவிதசைவமே. வேதாந்தமே இதன் பொருளாயின். இதை வேதாந்தம் போன்றதுஎனல் கூடாது. அவ்வேதாந்தம் வேதமேயாக, அவற்றை அவைதிகம் என்பதும் கூடாது. இவர்மதமோவெனில் வேதாந்தம்போலும் :என்றும் குறிக்கப்படும் வாயுசங்கிதை கூறியபடி அவைதிகபாமுமாகும். ஆகவே இச் சிவாசாரியர் கண்ட கலிவைபவ பாத்ம வசனம் அண்டினவைகளை ஆட்டிவைத்த பிசாசுபோல் இவர் மதத்தைப் பிடித்து பிரச்சன்னபௌத்த ·சத்தார்த்தமாக்கியது. இனி இவர் எடுத்துக்காட்டிய செய்யுள்களில் 'நிற்குணம' என்ற பதமும் ஜீவபராக்கியவாதமும் உள்ளது. பிரச்சன்ன பௌத்தம் என்றதனுல் இது வைணவாதியோர்கொண்ட மதமாகாது. இங்குள்ள மாயாவாதம் அசத் சாஸ்திரம்=பிரச்சின்னபௌத்தம்; சிவைககர்த்ருகம்=சிவனுலேயே வெளியிடப்பட்டது; கலிகாலத்து பிராமணவடிவால் சிவனுல் வெளியிடப்பட்டதுவேதவாக்கியங்களின் அபார்த்தம் நிறைந்தது. ஸ்வரூபத:கன்மத்தியாகவாதம் (கன்மங்களை பிரதிநிதியாகக்கொண்டு சொரூபத்துடன் விட்டொழிப்பது) 'சர்வகன்மத்யாகநைஷ்கர்ம்யம்' சோபாதிககுணபாரத்மநிரூபாதிக நிற்குண ஜீவர்களுக்குப் போலியைக்கியவாதம் (அதாவது ஜீவபராக்கியவாதம்) சகுணநிற்குணவாதம் (அதாவது சகுணம்ஒன்று நிற்குணம் இரண்டு என்று இரு இலக்ஷணம் கூறல்) வேதாந்தப்போன்மை அவைதிகத்துவம்

இவ்வளவு விசேடணங்களும் ஒருங்கமைந்தது மாயாவாதத் துவித்சைவமே எனல் நாட்டப்பட்டது. இனி இவர் வடமொழி வல்லாரிடம் சென்று இச் செய்யுள்களுக்கெழுதிய பொருள்கள் குற்றமுள்ளதாயின் அவற்றை சப்பிரமாணமாகக்காட்டி இது ஏகான்மவாத ப்ரம்மவாத வேதவாத வைதிகவாத அவித்துவித வாத நிற்குணவாத ஞானகர்ம சமாசவாதாதி திவிய விருது பூண்டதும், பௌத்தவாதத்தை அன்றுதொட்டு இன்றுவரை துலைத்துவருவதுமான வேதாந்த நந்நூலே இச் செய்யுளுக்கென நாட்டிக்கொள்வாராக. நிற்க.

இச் செய்யுள்கள் பாத்மத்தில் எப்பகுதியிலுள்ளன? ஏதோ உமாமகேசுவரர் சம்வாதத்தில் என்கிறார். எந்தஉமாமகேசுவர சம்வாதத்தில்? வைணவர் தப்தசக்கிரம் ஊர்த்துவபுண்டரம் இவற்றைப் புகழ்ந்து சிவனையும், பஸ்ம ருத்திராக்ஷங்களையும், தூற்றிய பிரகாணத்திலா? அல்லது மார்க்கண்டேயருக்குக் கண்ணன் உபதேசித்த உமாமகேசுவரர் சம்வாதத்திலா? முற் கூறியதெதிலெனின், அது ப்ரக்ஷிப்தம் என்னும் பிரமாணமாகா தென்றும் தக்க உபபத்திகளுடன் 'தப்தமுத்ராவித்ராவணம்' என்னும் நூலுடையார் விரித்தனர்.

(தொடரும்)

ஓர் பிராமணன்.

---

# கடவுள்.

---

கடவுள் என்னும் சொல்லில் கட என்னும் பகுதியும் உள் என்னும் விகுதியும் கூடி கடவுள் என்பதாயிற்று. கடவென்பதற்கு கடத்தல் என்றும் பொருளுண்டாதலின் இஃது வற்றலுணர்ந்தது என்னும் தொழிலாகுபெயர்போல் ஆகுபெயராக முடிந்தது. ஆகுபெயரின் இலக்கணமாவது ஒன்றின் பெயர் மற்றொன்றுக்கு தொன்றுதொட்டு ஆகிவருவதேயாகும்.

இனி சின்னாட்களுக்கு முன் குடந்தையில் நடந்த ஓர் அதிசயத்தை எடுத்துக்கொள்வோம். கும்பகோணத்தில் சில தினங்களுக்கு முன் ஈ. வே. இராமசாமியார் என்னும் பெரியார் சுத்-

ஈத் மன்யமான: சொற்பொழிவாற்ற வந்து கடவுள் என்பதே கிடையாது. கடவுள் வாழ்த்து என்பதும் கிடையாது. பிரார்த்தனை செய்வதெல்லாம் பெரியமுட்டாள்தனம் என இம்மாதிரி அனேக விஷயங்களை நாம் இதுவரையில் கேட்டேயிருக்கமாட்டோம். அப்படிப்பட்ட விஷயங்களே நிரம்பியிருந்த நீண்ட ஒரு பிரசங்கத்தை அருமையாகவெண்ணி நிகழ்த்தினர்.

உலகத்தினில் மனிதனாகப் பிறந்தால் அவன் பிறந்ததற்கு அறிகுறியாகவும் அவன் புகழ் நிலையுற்றிருப்பதற்கும் ஏதாவது ஒரு அதிசயமான காரியத்தைச் செய்தே தீருவான். அப்படிச் செய்தாய்தால் "தோன்றிற்புகழொடு தோன்றுக அஃதிலாற் தோன்றலிற் றோன்றாமை நன்று, என்னும் திருவள்ளுவவாக்கின் படிபிறவிப்பெரும்பயன் அடைந்தவனாக ஆவான். அவர் புகழை இந்த வழியாகத்தான் அடையவேண்டும் என்று சொல்லாதது அவரது பெரிய குற்றமாகும். அப்புகழை அடைதற்கு இக்காலத்தில் இரண்டே இரண்டுவழிகள் தானுண்டௌனச்சிலர்கண்டு பிடித்திருக்கின்றனர். அவைகளில் ஒன்று. மகாத்மாகாந்தியைத் தூஷிப்பது, மற்றொன்றுபகவானைத்தூஷிப்பது, தூஷித்தால்தான் விலக்ஷணமனிதன் ஆகலாம். அன்றியும் பத்திரிகைகளில் தன்பெயர் அடிபடவேண்டுமென ஆசைப்படுவோரும் மேற்கூறிய இரண்டு வழிகளையும் ஆசிரயிக்கலாம். நமது சாமியார் எதை யுத்தேசித்து இப்படி ஈசனை நிந்திக்கின்றாரோ அஃதை யீசனேயறிவர்.

நமது சாமியார் முதலில் காங்கிரஸில் சேர்ந்திருந்தால் நல்ல பெயர் கிடைக்குமெனவெண்ணி அதில் சேர்ந்தார். ஆனால் அவரது பொல்லாதகாலம் அவரை அதில் அதிககாலம் உழைக்கும்படி செய்யாததோடுகூட நமது ஸ்மிருதி முதலியவைகளில் கூறும்படியான "ஒருவன் மிகுந்தபாபங்களையும் மிகவும் சிறியதொருபுண்ணியத்தையும் செய்தால் முதலில் புண்ணியத்தின் பலனான சிறிது சுகத்திற்குப்பிறகு மிகுந்த பாபங்களின் பலனான அனேகம் துக்கங்களை யனுபவிப்பான்" என்னும் விஷயத்திற்கு எடுத்துக்காட்டாகவும் செய்துவிட்டது.

பின்னும் அவர் குடந்தையில் பேசும்பொழுது அங்கு ஒரு அதிசயம் நடந்தது. யாராயினும் ஓர் பெரியார் நமது ஊருக்கு எழுந்தருளி சொற்பொழிவாற்றவேண்டின் நமது ஊரிலுள்ள யாவராயினும் ஒரு பெரியாரையே தலைவராக தேர்ந்தெடுப்போம். குடந்தையிலோ எவ்வளவோ எம் எல் சி கள், எவ்வளவோ வக்கீல்கள் இவர்முதலாக இன்னும் எவ்வளவோ பெரிய மனிதர்கள் உளர். இவர்கள் இருக்கும்பொழுது நமது சாமியாருக்கு தலைமை வகித்தவரோ ஒரு சுருட்டுக்கடைக்காரர். பிறகு இருவரும் தெய்வத்தைப்பற்றி எப்படிக் கூறவேண்டுமெனத் தோன்றிற்றோ அப்படியெல்லாம் கூறினார்கள். அத்தலைவர் இப்படிக்கூறினாரே யொழிய அவருக்கு அபிப்பிராயம் தெய்வம் உண்டு என்பதில் தான் என பிறகு யாவருக்கும் வெட்டவெளியாயிற்று. எப்படி யெனில் அவரது சுருட்டுக்கட்டின் மார்க்கு விநாயகராகும். இப்படி இவர் தெய்வமில்லையென கூறிக்கொண்டு தனது சுருட்டுக் கட்டில்மாத்திரம் விநாயகர் உருவம் போட்டிருப்பதைப் பார்த்தால் சில ஆண்டுகளுக்குமுன் ஒரு சு-ம-தலைவர் பார்ப்பனர்களுக்கு ஒருவரும் வேலைகொடுக்கக்கூடாது எனக்கூறிக்கொண்டு தன்னிடம்மாத்திரம் ஒரு அய்யரை குமாஸ்தா வேலையில் வைத்துக்கொண்டிருக்கும் ஒருவரது கதை ஞாபகம் வருகின்றது.

அன்றியும் அவர் கடவுளைத்தூஷிக்க ஆரம்பித்ததும் அவரை பின்பற்றியிருந்த பலரும் அவரை விட்டுவிட்டனர் என்பது யாவரும் அறிந்தவிஷயம். இனியவர் எக்காரணத்தால் கடவுள் இல்லையெனத் தூஷிக்கின்றார் என்றால் அதுமாத்ரம் அவருக்குத் தெரியாது. இன்னும் இவர் கடவுள், கடவுள்வாழ்த்து என்பது ஒன்றும் கிடையாது. ஆனால் சு-ம மகாநாட்டில்தலைவர் வாழ்த்து என்பது மாத்திரம் உண்டு எனக்கூறினால் அதுமாத்திரம் எங்கிருந்து வந்தது.

ஆதலால் "அன்னநடை நடக்கப்போய் தன்னடையும் கெட்டாற்போல" என்னும் பழமொழிபோல் உலகச் சீர்திருத்தம் பண்ணுவதற்காக ஆரம்பித்துத்தானே சீர்குலைத்துப்போய்க் கொண்டிருப்பதை இத்துடன் நிறுத்தி "புகையிருந்தால் நெருப்புண்டு. பானையிருந்தால் குயவனுண்டு" என்பதுபோல் 'உலகிருந்தால் கடவுளுண்டு' என்பதை நன்றாயுணர்ந்து "தேகம் அநித்

யம் தெய்வம் துணைகொள்" என்ற ஆன்றோர் வாக்கை மனதிலிருத்தி தெய்வம் தொழுவர் என பூர்ணமாக நம்புகின்றேன்.

இப்படித்தொழுதால்தான் கீழே சொல்லிய "கடவுள்" என்னும் சொல்லிற்கேற்ப பிறவிக்கடலைக் கடக்கலாம்.

ஏ. ஆர். மலையப்பன்
ஆங்கரை.

---

# சிறுவருக்கான சிறுகதைக்கொத்து.

## ஊத்தமசிஷ்யரான ஊதங்கர்.

1. பைதரென்ற பெயருடைய பெரியவர்ஒருவர்இருந்தார். அவர் நன்றாகக் கல்விகற்றவர். குருகுலத்திலிருந்து குருவுக்குப் பணிவிடைசெய்தவர். வித்யைகளை நன்றாகக்கற்று வீடு திரும்பினார். தான் கற்றவித்யையைச் சிஷ்யர்களுக்கு கற்பிக்க ஆசை கொண்டனர். அவருக்கு மூன்றுசிஷ்யர்கள் இருந்தனர். அதில் ஒருவர் உதங்கர். இவர்குரு தான் குருகுலத்தில் மிக ச்ரமப்பட்டதால்தன் சிஷ்யர்களைத்தனக்குப் பணிவிடை செய்யச்சொல்வதில்லை. ஆனாலும் உதங்கர் சிஷ்யகர்மத்தை அறிந்து குரு சுச்ருஷைசெய்யத் தவறுவதில்லை, ஏன்? குரு சுச்ருஷையால் கல்விகற்பதே உத்தமவழி என இவர் அறிந்தார்.

2. பைதர் வேறொரு வேலையாக வெளியூர் சென்றார். என்னைப்போலிருந்து என் வீட்டுவேலையைக்கவனி! என சிஷ்யனுக்கு உத்தரவிட்டார். இச்சிஷ்யனது உத்தமகுணத்தைச் சோதிக்க தர்மதேவதை ஆசைகொண்டது. குருமனைவி ருதுஸ்நானம்செய்தாள். குரு இருந்தால் செய்யவேண்டியகர்மத்தை அவருக்குப்பதிலாக உள்ள நீ செய் என்றாள் குருபத்நீ. ஆ! இஃதென்ன? என்று திடுக்கிட்டான். அலறினான். கதறினான். முடிவாக முடியாது என்றான். குரு திரும்பிவந்து இதைக் கேட்டார். அளவில்லாத ஸந்தோஷமடைந்தார். அவனைமெச்சினார். ஸகல வித்யைகளையும் ஒரு நிமிஷத்தில் உபதேசித்தார். குருதக்ஷிணை என்னவேண்டும்:என்றான் சீடன். உன்குருபக்தியே போதுமென்றார் ருரு. இருவரும் உத்தமர் அல்லவா?

3. குருபத்நியை வணங்கி குருதக்ஷிணையாக என்ன
வேண்டும் என்றான் பௌஷ்யனெனும் அரசன் மனைவி அணிந்
திருக்கும் குண்டலங்களை நாலுநாளில் கொண்டுவா என்றாள்.
அவன் அங்கேகிளம்பினான். வழியில் காளைமேலேறிவரும் ஒரு
வனைக்கண்டான். உதங்கரைப்பார்த்து அவன், இதன்சாணியை
தின்னு என்றான். சாணியைத்தின்ன மனம்வருமா? முடியாதென்
றார் உதங்கர். உமது குருவே முன்னமிதைப்பக்ஷித்தார் என்றார்
அவர். ஆனால் ஸரியென்று யோசியாமல் புசித்தான். அக்காளை.
ஐராவதம் அதன் மீதுள்ளவன் இந்த்ரன். இந்த குருபக்தனுக்கு
கேடு வாராமலிருக்க அமிருதத்தையே சாணியாகக்கொடுத்தான்,
தேவர்கள் எப்போதும் மாவடமாயிருப்பதில் ஆசையுள்ளவர்
அல்லவா?

4, உதங்கர் பௌஷ்யராஜனிடம்சென்று குண்டலங்களைக்
கேட்டார். அரசன் தன்மனைவியாளிடம்சென்று வாங்கிக்கொள்
ளும் என்றான். கேட்பதை இல்லையென்றுசொல்லாமல்கொடுப்பவ
னன்றோ பணக்காரன்? ரிஷி அந்தப்புரம் சென்றார். அரசன்
மனைவியைக் காணவில்லை. ஏன்? அவள் பதிவ்ரதை. ஆசாரமில்
லாதவர் கண்ணில் படமாட்டாள், இந்த ரிஷி அமிருதத்தை
(சாணியை)ச்சாப்பிட்டு ஆசமநம் செய்யாமல் வந்தார். சாப்
பாட்டிற்குமுன்னும் பின்னும் ஆசமநம் செய்யவேண்டும். ஆசா
ரமில்லாதவரை அவர் கற்ற வேதமும் கைவிடுமாம். கற்றால்
மாத்ரம் போதுமா? அதன்படி நடக்கவேண்டாமா?

5. மறுபடி இதை அறிந்து ஆசமநம் செய்தார். அவளைத்
தர்சித்தார். குண்டலங்களை வாங்கிக்கொண்டு திரும்பினார்.
வழியில் மூத்ரம் வந்துவிட்டது. குண்டலத்தைக்கீழே வைத்து
விட்டுச்சென்றார். காலலம்பி வந்து பார்த்தார். அதைக்காண
வில்லை, எங்கே போச்சு? ஓர் ஸந்யாஸி அதை எடுத்து ஓடினான்.
அவன் யார்? அவனே தக்ஷகன். ஏனெடுத்தான் தெரியுமோ?
உதங்கன் செய்த குற்றத்தால். அவன் செய்ததென்ன? ரத்நத்
தைக்கீழேவைத்தான். வைக்கலாமா? மணி, சங்கம், ப்ராமணர்
ப்ருஷ்டம், ஸ்திரீகள்மார்பு, தீபம் ரத்னம் இவைகளைக்கீழே பூமி
யில் வைக்கக்கூடாது அல்லவா?

6. தக்ஷகன் பாதாளத்தில் பதுங்கினான். உதங்கன் தன் தண்டத்தால் பூமியை நோண்டினான், இவன் கஷ்டப்பட்டாவது குரு கைங்கர்யம் செய்வதைப்பார்த்தான் இந்த்ரன். இவன் தண்டத்தில் வஜ்ராயுதத்தையேவினான். பூமி சந்துகொடுத்தது. பாதாளம் போனான். பாம்புகளைத் துதித்தான். இரண்டு பெண்களைக்கண்டான். அவர்கள் கறுப்பும் வெளுப்புமான நூல்களைக் கொண்டு துணி நெய்கின்றனர். ஆறு குழந்தைகள், முன்னூற்றறுபது ஆரக்கால்களுள்ள ஓர் சக்ரத்தைச் சுழற்றினர். ஒன்றுந்தெரியாமல் இந்த்ரனைத் துதித்தார் ரிஷிகுமாரர்.

7. குதிரைமீதேறி ஓர் புருஷனிவர் எதிரில் வந்தார். அவரே இந்த்ரன். குரு தக்ஷிணைக்காக உதங்கர் படும்பாட்டைப்பார்த்தார். அவர் மனம் எறங்கியது. உதங்கா! இக்குதிரையின் பின் த்வாரத்தில் ஊது என்றார். ஊதினான். அதிலிருந்து அக்னி ஜ்வாலை கிளம்பிற்று. பாதாளத்தை தஹித்தது. உடனே ஓடிவந்தான் தக்ஷகன். இவர் குருபக்தியைக்கண்டு ஆச்சரியப்பட்டான். குண்டலங்களைக்கொடுத்தான். ஆனால் நாலுநாளுக்குள் குண்டலம் வேண்டுமென்பது குருபத்னியின் உத்திரவு. இங்கேயே மூன்று நாளும் ஆய்விட்டது; என்னசெய்வான். குண்டலம் கிடைத்தும் குறித்தவேளையில் போகமுடியவில்லையே என வருந்தினான்.

8. உண்மையான பக்திமட்டுமிருந்தால்போதும். தேவர் வேண்டியமட்டும் ஸஹாயம் செய்வர். தேவேந்த்ரன் தன்குதிரை மீதேற்றி உதங்கரை அனுப்பினான். குருகுலம்வந்து இறங்கினார் இவர்குருபத்னி; சிஷ்யன் இன்னும்வரவில்லையே! அக்குண்டலங்களை அணிந்து ப்ராம்மணர்களுக்குப் பரிமாற எண்ணினேனே! என்று சொல்லிக்கொண்டேயிருக்கிறாள். இவனும் உள்ளே சென்று குண்டலத்தைக்கொடுத்தார். உள்ளம்மகிழ்ந்து ஆசீர்வதித்தாள். குருவினிடம் உத்திரவுபெற்று தன் வீடுசென்றார் மணம்செய்து கொண்டார்,

9. குரு தனக்கு தக்ஷிணை வேண்டாமென்றாலும் தன் கடமையைத்தவறாமல் குருதக்ஷிணைத் தேடச்சென்றார். தனது ஆசாரப்பிழைகளைத திருத்திக்கொண்டார். உயிரையும் மதிக்

காமல் குரு கார்யத்தையே பெரிதாக எண்ணினர். எவராலும் பார்க்கமுடியாத காலசக்ரத்தைக்கண்டார். இருபெண்கள். இரண்டு. ஸந்த்யை; நூல்கள் பகலிரவு. ஆறுகுமாரர் ஆறு ருதுக்கள் நாட்கள் ஆரக்கால்கள். சக்ரம் வருஷம் வஸ்த்ரம் காலம் என உணர்ந்தார். அவர் குருவைத் தெய்வமாகநினைத்தவர். குரு கார்யத்திற்குஇடஞ்சல்செய்த தக்ஷகனைப் பழிவாங்கநினைத்தார். ஆதலால் ஜநமேஜயனை ஸர்ப்பயாகம் செய்யும்படி தூண்டினர். குருபக்தியின் மஹிமையைப் பார்த்தீர்களா?

ஸ்ரீவத்ஸ வெ ஸோமதேவசர்மா.

---

# வாரவிருத்தாந்தம்.

திருப்பணிதர்மம். தாராபுரத்தில் மூர்த்தீகரித்துள்ளபகவான் வீராகவஸ்வாமியின் ஆலயத் திருப்பணி ஆஸ்திகரது தநஸஹாயத்தால் நடந்தேரிவருகிறது. ப்ராகாரத்திருப்பணிகள் பூர்த்தி ஆய்விட்டன. கோபுரத்தில் வேலை நடக்கிறது. சீக்கிரத்தில் கும்பாபிஷேகம் நடைபெரும். கோயில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது நம் நாட்டுப்பழமொழி. காயமே கோயிலாகக்கொண்டுள்ள தைவங்களுக்குப் பணிவிடை செய்வது சிறந்த தர்மம் என்று வேதாந்திகளைப்போல் பேசி நாஸ்திகத்தை பலர் விருத்திசெய்யும் இக் கலியில் இத்தகைய தர்மகைங்கர்யம் நடப்பது மிகவும் சிலாக்யம். ஆஸ்திகர் வாழ்க!

முன்னே அணைகோலவேண்டும். குருவாயூர் ஸ்ரீக்ருஷ்ணாலயத்தில் காங்க்ரஸ்காரர் தீண்டாதாரை உள்ளே அழைத்துச் செல்ல ஸத்யாக்ரஹம் செய்கின்றனர். அப்போதுதான் ஆஸ்திகர் விழித்துக்கொண்டார். கூட்டங் கூடினர். அப் பாபச்செயலைக் கண்டித்தனர். ஆஸ்திகத் தொண்டர் படையைத் திரட்டினர். பகவத் கிருபையால் இவர்களது முயற்சி கைகூடவேண்டும். மற்ற ஆஸ்திகர்களும் வெள்ளம் வருவதற்கு முன்னே அணை கோலும்படி வேண்டுகிறோம். ஆஸ்திகர் கூட்டத்தை ஆதரித்தும் நாஸ்திகரைக் கண்டித்தும் ஆங்காங்கு ஸபைகூடவேண்டும்.

வைதிகமதமும் தற்காலநிலையும். 3உ இத்தலைப்பில்கண்ட விஷயமாக சிதம்பரம் பக்தவிலாஸ ஸபையாரும், வர்ணாச்ரமம்

என்பதைப்பற்றி ப்ராம்மண ஸபையாரும் ஒரு உபன்யாஸம் செய்துவைத்தனர். உபன்யாஸகரோ சில ஆண்டுகளுக்கு முன் காசியில் ஓர்பெரிய வர்ணாச்ரம மஹாஸபையைநடத்தி நாடெங்கும் உத்தம தார்மிகன் என உலக ப்ரஸித்தமானவர் மஹாமஹோ பாத்யாய பிர்மஸ்ரீ அநந்தக்ருஷ்ண சாஸ்திரிகள். அவரது யோக்யதையையும், உபன்யாஸ விஷயத்தைப்பற்றி நாமொன்றும் சொல்லத் தேவையில்லை. இதுபோன்றவர் உபன்யாஸம் ஒவ்வொருஊரிலும் நடக்கவேண்டுமென்பது நமதுவிருப்பம்.

வைதிக தர்ம ஸம்வர்த்தினீ. இம்பெயர்கொண்ட ஸபை கள்ளிடக்குறிச்சியில் ஓர் ஸம்ஸ்கிருத கலாசாலை நடத்திவருகிறது. ஸரஸ்வதி பூஜையை உத்தேசித்து ஒருபெரியார் தலைமையில் விசேஷ பூஜாவைபவம் நடந்தது. அநேகமாணவர் வாக்யார்த்தம் சொன்னார்கள். பெண்குழந்தைகள் அழகாக ச்யாமளாதண்டகத்தைப் பாடினர். பலர் அநேக தர்மவிஷயமான உபன்யாஸங்களைச் செய்தனர். இவ்வளவு சிறப்பாக கலாசாலையை நடத்துபவரை மிக மிகக் கொண்டாடுகிறோம். ஸபையின்பெயருக்கேற்க மாணவருக்கும் மற்றோருக்கும் வைதிக தர்மத்தைப் புகட்டும்படி பிரார்த்திக்கிறோம்.

ராஜா தார்மிகோ விஜயீபவது. 6௨ திருவநந்தபுரம் மஹாராஜா மகா-ர-ர-ஸ்ரீ சித்திரைத்திருநாள் என்பவர் தனது ராஜ்ய பாரத்தை ஏற்றுக்கொண்டார். முறைப்படியே ஸகல ராஜவைபவங்களும் நடந்தேறின. வில்வட்டுக் குல்லாயில் ஸ்ரீபத்மநாப ஸ்வாமியின் பொன்னடி பதிந்திருந்தது. அதைத் தலையிலணிந்து எண்ணிறந்த ப்ராஹ்மணர்கள் வேதபாராயணம்செய்ய அழகாக பவனிவந்து ஸிம்ஹாஸநத்திலமர்ந்தார். ஸ்ரீஜகத்குரு ச்ருங்கேரி ஸ்ரீசங்கராசார்யஸ்வாமிகள் அநுப்பியிருந்த ப்ரஸாதத்தை விநய புரஸ்ஸரமாக ஏற்றுக்கொண்டார். தன் முன்னோர் வழியைப் பின்பற்றி ராஜ்யத்தை ஆளுவதாக குடிகளுக்கு வாக்களித்தார். தர்மமே ஜெயம். தர்மத்தைக் கடைபிடித்து ஆளும்வரை ஜயமுண்டு பயமில்லை. தார்மிகனாய் விஜயியாயிருப்பாராக.

ஓர் அரியதர்மம். கும்பகோணம்காவேரியில்சர்க்கரைப்படித்துறை முதல் வைச்யத்துறைவரையிலும் ஓர்தார்மிகப்ராமணன் கருங்கல்லால்அழகாகப் படித்துறை கட்டியிருக்கிறார். அருகே ஜபம்செய்ய

மண்டபமும், ஓர் விநாயகர் ஆலயமும், ப்ராம்மணர் அப்ரக்ரியை நடத்த ஓர் கட்டிடமும். அச்வத்தமரத்திற்கு ப்ரதக்ஷிணம் செய்வதற்கேற்ற ஓர் மேடையும், ஸோமேச்வரஆலயத்தின்முன் மண்டபத்தையும், மதிலையும் கட்டி பேருபகாரம்செய்த இப் புண்யவானை எவரும் எக்காலத்திலும் மறக்கமாட்டார். ஸ்ரீமான் எஸ் ஆர் சுந்தரம்மையர் என்பது அவ்வுத்தமரது திருநாமம். இப் புண்யவானது சரீரம் வெகுகாலமிருந்து மற்றும்பல திருப் பணி செய்யும்படி ஸர்வேச்வரன் அருள்புரிவாராக. காசி கங்கைப் படித்துறைகட்ட வெள்ளைக்காரர் பணமளிக்கின்றனர்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

---

## ஸூதபுராணிகர்.

சென்னையில் ஸ்ரீசங்கரமடம் புராணப்ரவசந ஸபையார் அங்கேநடத்திவரும் பதினெட்டு புராணங்களையும் தமிழில் சுருக் கமாகவும் விளக்கமாகவும் ஸ்ரீமான் ஸ்ரீவத்ஸஸோமதேவ சர் மாவை ஆசிரியராகக்கொண்டு ஷை தலைப்பெயரைக்கொண்டு மாத ஸஞ்சிகையாக வெளியிட உத்தேசித்திருக்கின்றனர். ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாளுடைய ஆக்ஞைக்கிணங்க கூடியவரைநம் மதக்கொள்கைகளை எல்லோரும் விசேஷமாக பெண்களும்அறிய வேண்டுமென்பதே ஸபையின்கொள்கை.

எந்ததார்மிக தநவானோ அல்லது ஸபையோ இந்த விஷயத் தில் அச்சுசெலவு முதலியவைகளைக் கவனித்துக்கொள்வதானால் எழுதிக்கொடுக்கவும், மற்ற ஸௌகர்யங்களைச் செய்யவும் ஸித்த மாயிருக்கிறோம். இதனால் யாதொருலௌகிக வருமானத்தை யும் நாங்கள் விரும்பவில்லை. இக்காலத்தில் அச்சு முதலியசெல வுகள் அபரிமிதமாக ஆகின்றன. தநமில்லாவிட்டால் எக்காரிய மும் நடப்பதில்லை. கஷ்டகாலத்தில் என் நல்லகாலதிலும்தம்எவரை யும் தேஹி என்று கேட்பது நமக்கு வழக்கமில்லை.

ஆதலால் பின்னறப்பத்திரிகையில் குறிப்பிட்டதேதியில்வருஷ சந்தாவாக ஒருரூபா அனுப்பினால் அதுவும் 500. சந்தாவுக்குக் குறையாமலிருந்தால் இக்கார்யத்தில்ப்ரவேசிக்கலாமென்பது எண் ணம். இது நல்லகார்யம் ஆரம்பிக்கலாமென்றும் தாங்கள் சந்தா தாராகசேர்வதோடு பலரைச்சேர்ப்பதாகவும் கீழ்க்கண்ட விலா சத்திற்குகடிதமூலம் உத்ஸாஹம் ஊட்டினாலொழிய ஆரம்பிக்க ஆஸ்திகர் ஆதரவை எதிர்பார்க்கும்.

ஸஜ்ஜனவிதேயன் வே. ஸோமதேவசர்மா' தலைவன்.

154. தம்புசெட்டிவீதி சென்னை